# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

எண்.19A, ருக்மினி லட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை – 600 008

Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377

Email : tnerc@nic.in Web site : www.tnerc.tn.nic.in.


செ. வெ. எண்.1/2014

நாள் : 09–01–2014

## செய்தி வெளியீடு

**மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் புதிய உறுப்பினர் திரு. கெ. ராஜகோபால் அவர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்கள்.**

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் உறுப்பினர் பதவி 16–7–2013 முதல் காலியாக இருந்ததைத் தொடர்ந்து, தமிழக அரசு புதிய உறுப்பினரை தேர்வு செய்ய மாண்புமிகு திரு. நீதிபதி (ஓய்வு) ஆர் ரகுபதி, தலைமைச் செயலாளர் மற்றும் தலைவர், மத்திய மின்சார அதிகார ஆயம், புதுடெல்லி (Central Electricity Authority) ஆகியோரைக் கொண்ட தேர்வுக் குழுவை நியமித்தது.

மேற்கண்ட தேர்வுக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தமிழக அரசு திரு. கெ. ராஜகோபால் அவர்களை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் உறுப்பினராக நியமனம் செய்ததைத் தொடர்ந்து, இன்று (09.01.2014) தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் புதிய உறுப்பினர் திரு. கெ. ராஜகோபால் அவர்களுக்கு பதவிப் பிரமாணமும், இரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்கள்.

இந்த நிகழ்வின் போது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் உறுப்பினர் திரு. செ. நாகல்சாமி, இ.க.த.ப., எரிசக்தித்துறை முதன்மைச் செயலர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையச் செயலர் திரு. சி. குணசேகரன் ஆகியோர் உடனிருந்தனர். இத்துடன் உறுப்பினர் அவர்களின் தன்விவரக்குறிப்பு இணைக்கப்பட்டுள்ளது.

**சி. குணசேகரன்**

செயலாளர்

தமிழ்நாடு மின்சார

ஒழுங்குமுறை ஆணையம்